Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)



2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road,
Madurai-625 001.



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 155 | உள்ளூர் - 04.06.2026 | வியாழன் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 155 | வெளியூர் - 05.06.2026 | வெள்ளி | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |



பேங்க் ஆப் பரோடா: 5000 காலியிடங்கள்!

“இரவில் இவற்றை கடன் வாங்காதீர்கள்!”

அண்ணாமலையின் புதிய கட்சி!

ஜப்பானை புரட்டிப்போட்ட ‘ஜாங்மி’ புயல்..!

# ஈரான் போரை முடிவுக்குக் கொண்டுவரும் தீர்மானம் நிறைவேற்றம்; அதிபர் டிரம்புக்கு பின்னடைவு!

வாஷிங்டன், ஜூன். 04–

அதிபர் டிரம்ப் பார்லிமென்ட் அனுமதி இன்றி தன்னிச்சையாக ராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதைக் கட்டுப்படுத்தும் நோக்கிலான ‘போர் அதிகார தீர்மானம்’அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.



பார்லிமென்டின் அனுமதியின்றி இஸ்ரேலுடன் இணைந்து ஈரான் மீது தாக்குதல்களைத் தொடுத்ததன் மூலம் டிரம்ப் அரசியலமைப்பை மீறியதாக ஜனநாயகக் கட்சியினர் குற்றம் சாட்டுகின்றனர். போர் அதிகாரச் சட்டத்தின்படி, அமெரிக்கப் படைகளைப் போரில் ஈடுபடுத்திய பிறகு, அதிபர் பார்லிமென்டில் ஒப்புதலைப் பெற 60 நாட்கள் அவகாசம் உள்ளது. அந்தக் காலக்கெடு பல வாரங்களுக்கு முன்பே முடிந்துவிட்டது, தற்போது டிரம்ப் சட்டத்தை மீறுவதாக ஜனநாயகக் கட்சியினர் கூறுகின்றனர்.

ஈரான் போரிலிருந்து அமெரிக்கப் படைகளைத் திரும்பப் பெறுமாறு உத்தரவிடும் தீர்மானத்தை அமெரிக்கப் பிரதிநிதிகள் சபை நிறைவேற்றியது. ஆளும் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த நான்கு உறுப்பினர்கள், எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியினருடன் இணைந்து வாக்களித்ததை அடுத்து, இந்தத் தீர்மானம் 215க்கு 208 என்ற ஓட்டுக்கள் அடிப்படையில் நிறைவேறியது.

அமெரிக்க மக்களின் சார்பாக டிரம்புக்கு இது ஒரு முக்கியசெய்தி. ஈரானில் அவர் விரும்பித் தொடுத்த, சட்டவிரோதமான போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டிய நேரம் இது என பிரதிநிதிகள் சபையின் வெளியுறவுக் குழு ஜனநாயகக் கட்சியினர் தெரிவித்தனர்.

3 மாதங்களுக்கு முன்பு போர் தொடங்கியதிலிருந்து, ஈரானுக்கு எதிரான ராணுவ நடவடிக்கைகளைக் கைவிடுமாறு டிரம்பைக் கட்டாயப்படுத்தும் ஒரு தீர்மானத்திற்கு, குடியரசுக் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதிநிதிகள் சபை ஒப்புதல் அளித்தது இதுவே முதல் முறையாகும். இந்தப் போர் விவகாரத்தில் பார்லிமென்டின் இரு அவைகளிலும் இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எனினும், இது சட்டமாவதற்கு வெள்ளை மாளிகையில் ஒரு இறுதிச் சவாலை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. தனது ராணுவ அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் இந்த புதிய தீர்மானத்தை முடக்குவதற்கு டிரம்ப் தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# லெபனானுடன் போர்நிறுத்த ஒப்பந்தம் இல்லை: இஸ்ரேல் அறிவிப்பு!

டெல் அவிவ், ஜூன். 04–

இஸ்ரேல் ராணுவ தளபதி இயால் ஜமீர், ஹைபா நகரிலுள்ள கடற்படை தளத்திற்கு சென்றார். போருக்கான விசயங்களை பற்றி ஆய்வு மேற்கொண்ட அவர், படையினருடன் ஆலோசனை மேற்கொண்டார். இதன்பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது, லெபனானுடன் போர்நிறுத்த ஒப்பந்தம் எதுவும் இல்லை என உறுதிப்படுத்தினார்.



இஸ்ரேல் மற்றும் லெபனான் இடையே அமெரிக்கா தலைமையிலான 4–வது சுற்று பேச்சுவார்த்தை வாஷிங்டனில் நடந்து வரும் சூழலில், அவர் இதனை கூறியுள்ளார். இந்த பேச்சுவார்த்தைக்கு, லெபனானில் இருந்து செயல்படும் ஹிஸ்புல்லா அமைப்பு கடுமையாக எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. ஈரானின் வெளியுறவு துறை மந்திரி அப்பாஸ் அராக்சி, அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே பேச்சுவார்த்தைக்கான தொடர்பு தொடர்ந்து தடையற்ற வகையிலேயே இருக்கிறது என கூறியுள்ள நிலையில், ஜமீர் இதனை கூறியுள்ளார். இதனால், லெபனான் மீது இஸ்ரேல் நடத்தும் தாக்குதல் தொடரும் என அஞ்சப்படுகிறது.

அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக, அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகள் ஈரானை கடுமையாக தாக்கின. வளைகுடா நாடுகளில் உள்ள தளங்களை பயன்படுத்தியும் தாக்குதல் நடந்தது என கூறப்படுகிறது. இதனால், குவைத், கத்தார் உள்ளிட்ட அரபு நாடுகள் மீதும் கடந்த காலங்களில் ஈரான் தரப்பில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்டது. தொடர்ந்து ஈரான் பதிலடி தாக்குதலில் ஈடுபட்டு வருகிறது. ஈரான் நாட்டுக்கு ஆதரவாக ஹிஸ்புல்லா அமைப்பு போரில் ஈடுபட்டு வருகிறது. லெபனானில் இருந்து அதன் உறுப்பினர்கள் தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால், லெபனானை இஸ்ரேல் தாக்கியது. அந்நாட்டில் உள்ள ஹிஸ்புல்லாவின் உள்கட்டமைப்புகளை இலக்காக கொண்டு இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது.

இந்த சூழலில், லெபனான் தலைநகர் பெய்ரூட்டுக்குள் இஸ்ரேல் படைகள் நுழையாது என்று அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் சமீபத்தில் கூறினார். இரு நாடுகளும், பரஸ்பர பகைமைகளை தவிர்த்து விடும் என்றும் இருதரப்பும் தற்காலிக போர் நிறுத்தம் மேற்கொள்வார்கள் என்றும் கூறினார். ஆனால், நெதன்யாகுவோ படைகளை தாக்குதல் நடத்த தயாராக இருக்க உத்தரவிட்டு உள்ளது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# முதலமைச்சர் விஜய் கேபினெட் கூடுகிறது!

சென்னை, ஜூன். 04–

தமிழகத்தில் நடைபெற்ற 17–வது சட்டசபை தேர்தலில் த.வெ.க. வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ளது. 12–வது முதல்–அமைச்சராக அக்கட்சியின் தலைவர் ஜோசப் விஜய் பொறுப்பு ஏற்றுக் கொண்டுள்ளார். இந்த நிலையில், த.வெ.க. அரசின் முதல் சட்டசபை கூட்டம் ஜூலை மாதம் முதல் வாரத்தில் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.





த.வெ.க. அரசின் முதல் சட்டசபை கூட்டத்தில், கவர்னர் அர்லேக்கர் உரையாற்ற இருக்கிறார். கவர்னர் உரையில் புதிய அறிவிப்புகள் வெளியாகுமா? என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவரது உரையை தொடர்ந்து, அடுத்த 3 நாட்கள் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நடைபெறும். தொடர்ந்து, 2026–2027–ம் ஆண்டுக்கான பொது பட்ஜெட் தாக்கல் செய்யப்பட இருக்கிறது.

த.வெ.க. தனது தேர்தல் அறிக்கையில் பெண்களுக்கான மகளிர் உரிமைத்தொகை ரூ.2,500 ஆக உயர்வு, ஆண்டுக்கு 6 கியாஸ் சிலிண்டர் இலவசம், பெண்களின் திருமணத்திற்கு தாலிக்கு ஒரு பவுன் தங்கம், பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் என்று அடுக்கடுக்கான அறிவிப்புகளை வெளியிட்டது. எனவே, பட்ஜெட் அறிவிப்பில் தேர்தல் வாக்குறுதிகள் இடம்பெறுமா? என்று பொதுமக்கள் எதிர்பார்க்கிறார்கள். இந்த நிலையில், சட்டசபை கூட்டத்தொடர் தொடங்குவதற்கு முன்பு அமைச்சரவை கூடி விவாதிப்பது வழக்கம். அதன்படி தமிழக அமைச்சரவை நாளை மறுநாள் (வெள்ளிக்கிழமை) காலை 11 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்–அமைச்சர் விஜய் தலைமையில் அமைச்சரவை கூட்டம் நடைபெறுகிறது. இதில் அனைத்து அமைச்சர்களும் பங்கேற்க உள்ளனர்.

முதல்–அமைச்சர் விஜய் தலைமையிலான தவெக அரசு பொறுப்பேற்ற பின் நடக்கும் முதல் அமைச்சரவை கூட்டம் இதுவாகும். இந்த கூட்டத்தில் தமிழ்நாட்டில் புதிதாக தொடங்கப்பட உள்ள தொழில் முதலீடுகள் குறித்து ஆலோசிக்கப்பட உள்ளது. கொள்கை ரீதியாக முக்கிய முடிவுகள் எடுக்கப்பட உள்ளதாகவும், மதுபான கடைகள் தொடர்பாகவும் அமைச்சரவை கூட்டத்தில் முக்கிய முடிவுகள் எடுக்கப்படவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

## ஜூன் 5–ல்

# ரிசர்வ் வங்கி எடுக்கும் பெரிய முடிவு! உங்கள் இஎம்ஐ மற்றும் சேமிப்பில்

## அதிரடி மாற்றங்கள்?

புதுடெல்லி, ஜூன். 04–

இந்திய ரிசர்வ் வங்கி (RBI) தனது வட்டி விகிதக் கொள்கை குறித்த முடிவுகளை ஜூன் 5, 2026 அன்று அறிவிக்க உள்ளது. உங்கள் வீட்டுக் கடன் இஎம்ஐ மற்றும் சேமிப்புக்கான லாபம் ஆகியவற்றைத் தீர்மானிக்கும் முக்கியக் கூட்டமாக இது இருக்கும். இந்த முறையும் ரெப்போ வட்டியில் (Repo Rate) மாற்றம் இருக்காது என்றே முதலீட்டாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.





இந்த காலாண்டில் உங்கள் கடன் சுமை மற்றும் சிறுசேமிப்புத் திட்டங்களின் வருவாயில் இந்த முடிவு நேரடி தாக்கத்தை ஏற்படுத்தும். வெள்ளிக்கிழமை காலை வெளியாகவுள்ள இந்த அறிவிப்பை வீட்டுக் கடன் வாங்கியவர்கள் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். ரிசர்வ் வங்கியின் நடவடிக்கைகளுக்கு ஏற்ப, ‘புளோட்டிங் ரேட்’ (Floating rate) முறையில் கடன் வாங்கியவர்களின் மாதாந்திரத் தவணை உடனடியாக மாற வாய்ப்புள்ளது. ஒருவேளை வட்டி விகிதத்தில் மாற்றம் இல்லையென்றால், வங்கிகளின் ஃபிக்சட் டெபாசிட் (FD) வட்டி விகிதங்கள் அதன் உச்சத்தை எட்டிவிட்டதாகக் கருதலாம்.

எனவே, நீண்ட கால லாபத்தைப் பெற இப்போதே அதிக வட்டி தரும் எஃப்டிகளில் முதலீடு செய்வது புத்திசாலித்தனம். இஎம்ஐ மற்றும் சேமிப்பில் ரிசர்வ் வங்கி கொள்கையின் தாக்கம் பிபிஎஃப் (PPF) மற்றும் சுகன்யா சம்ரிதி யோஜனா போன்ற சிறுசேமிப்புத் திட்டங்களின் வட்டி விகிதம், அரசுப் பத்திரங்களின் வருவாயைப் பொறுத்தே அமையும். ரிசர்வ் வங்கியின் கொள்கை முடிவுகள் இந்த வருவாயிலும், அடுத்த காலாண்டு வட்டி விகிதத்திலும் எதிரொலிக்கும். எல்ஐசி (LIC) போன்ற நிறுவனங்களின் நிலையான வருமானம் தரும் திட்டங்களும் இந்த மாற்றங்களால் பாதிக்கப்படலாம். பாதுகாப்பான முதலீட்டை விரும்புவோருக்கு, தற்போதுள்ள அதிக வட்டி விகிதங்கள் இன்சூரன்ஸ் திட்டங்களைச் சிறந்த தேர்வாக மாற்றியுள்ளன. மூத்த குடிமக்களுக்குத் தபால் நிலைய எஃப்டிகள் (Post Office FD) இப்போதும் ஒரு பாதுகாப்பான தேர்வாகவே உள்ளன.

அதேசமயம், பணவீக்கம் நிலையற்றதாக இருப்பதால் கேரளா ஸ்டேட் ஃபைனான்சியல் என்டர்பிரைசஸ் (KSFE) போன்ற சிட் ஃபண்டுகளில் முதலீடு செய்யும்போது கவனம் தேவை.

கடன் வாங்குவதற்கான செலவு அதிகமாக இருப்பதால், ஏலச் சீட்டுகளில் ஆரம்பத்திலேயே பணம் எடுப்பது உங்கள் லாபத்தைக் குறைக்கலாம். புதிய கடன்கள் அல்லது நிதித் திட்டங்களில் சேரும் முன் உங்கள் கடன் சுமையை ஒருமுறை சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

**ஜூன் 5 ரிசர்வ் வங்கி கொள்கை:**

நீங்கள் செய்ய வேண்டியவை வெள்ளிக்கிழமை வெளியாகவுள்ள இந்த அறிவிப்பு, அடுத்த சில மாதங்களுக்கான உங்கள் நிதி நிலையைத் தீர்மானிக்கும். புத்திசாலித்தனமான முதலீட்டாளர்கள் இப்போதே வங்கி வட்டி விகிதங்களைத் தபால் நிலையத் திட்டங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். கடன் வாங்கியவர்கள், வேறு வங்கிக்குக் கடனை மாற்றுவதன் மூலம் வட்டிச் சுமையைக் குறைக்க முடியுமா என்று ஆராயுங்கள். ரிசர்வ் வங்கியின் அதிகாரப்பூர்வ அறிவிப்பைப் பின்பற்றி, உங்கள் முதலீடு மற்றும் சேமிப்புத் திட்டங்களில் தேவையான மாற்றங்களைச் செய்துகொள்ளுங்கள்.





தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் முன்னிலையில் தலைமைச் செயலகத்தில், லார்சன் & டூப்ரோ (Larsen & Toubro) லிமிடெட் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே, 18,600 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீட்டில் 8,200 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் மூன்று திட்டங்கள் மேற்கொள்வதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தொழில்துறை அமைச்சர் செல்வி எஸ். கீர்த்தனா, தலைமைச் செயலாளர் மு.சாய்குமார், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ச. விஜயகுமார், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் செயல் இயக்குநர் மருத்துவர் பு. அலர்மேல்மங்கை, எல் & டி நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் எஸ்.என். சுப்ரமண்யன், முன்முயற்சிகள் மேம்பாட்டுப் பிரிவுத் தலைவர் கே.ஜி.சத்யநாராயணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## டயட்டா? இல்லை ஆபத்தா?




பலர், உடற்பயிற்சி பயணத்தைத் தொடங்கும் போது, விரைவாக உடல் எடையைக் குறைக்கும் முயற்சியில் உணவைத் தவிர்ப்பது அல்லது குறைவாகச் சாப்பிடுவதைத் தேர்ந்தெடுக்கிறார்கள். காலை உணவைத் தவிர்ப்பது, மதிய உணவைத் தாமதப்படுத்துவது, அல்லது காபியுடன் நாளைக் கடப்பது போன்ற பழக்கங்கள் உடற்தகுதிக்கு வழிவகுக்காது, மாறாக உங்கள் ஆரோக்கிய முன்னேற்றத்தை மெதுவாக்கும் என்று நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

உடல் எடையைக் குறைப்பது என்பது உடற்பயிற்சிக் கூடத்தில் கடினமாக உழைப்பது மட்டுமல்ல, சரியான ஊட்டச்சத்து, தூக்கம், மன அழுத்த மேலாண்மை மற்றும் உடல் மீட்சி ஆகியவற்றையும் சார்ந்தது என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்..

பகலில் உணவைத் தவிர்ப்பவர்கள் மாலையில் அதிக பசியை உணர்கிறார்கள். இது இரவில் கட்டுப்பாட்டை இழந்து, அதிகமாகச் சாப்பிட அல்லது ஆரோக்கியமற்ற துரித உணவுகளை நாட வழிவகுக்கும். இந்த ஒழுங்கற்ற உணவுப் பழக்கம் உங்கள் செரிமான அமைப்பை முற்றிலும் சீர்குலைக்கக்கூடும். உடற்தகுதியை அடைவதற்கு பட்டினி கிடப்பது தீர்வு அல்ல, ஒழுக்கமான வாழ்க்கை முறையே அதற்கான திறவுகோல்.

உணவைத் தவிர்ப்பதற்குப் பதிலாக, புரதம், நார்ச்சத்து, ஆரோக்கியமான கொழுப்புகள் மற்றும் சிக்கலான கார்போஹைட்ரேட்டுகள் நிறைந்த சிறிய, சமச்சீரான உணவுகளை சீரான இடைவெளியில் உண்ணுங்கள். இவை நாள் முழுவதும் உங்கள் ஆற்றல் அளவை சீராக வைத்திருப்பதோடு, உங்கள் உடற்பயிற்சி செயல்திறனையும் மேம்படுத்தும்.

திடீர் எடை குறைப்பு உணவுகள் மற்றும் நச்சு நீக்கும் தேநீர் போன்ற தற்காலிக முறைகளைக் காட்டிலும், உண்மையான உடற்தகுதி என்பது, நீண்ட காலத்திற்கு உங்கள் உடல் வலிமையாகவும் ஆரோக்கியமாகவும் மாறுவதற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குவதாகும். முறையான ஊட்டச்சத்து மற்றும் ஒரு நிலையான வாழ்க்கை முறையின் மூலம் மட்டுமே நீங்கள் விரும்பும் ஆரோக்கியமான உடற்தகுதியை அடைய முடியும். பசியைக் கட்டுப்படுத்துவது என்பது பசியை நிறுத்துவது அல்ல, மாறாக சரியான நேரத்தில் உடலுக்குத் தேவையான எரிபொருளை வழங்குவதே என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

# ரூ.1.15 லட்சம் கோடி தங்கக் கையிருப்பை விற்றதா ரிசர்வ் வங்கி?



புதுடெல்லி, ஜூன். 04–

மத்திய கிழக்கு போரால் எண்ணெய், எரிவாயு தட்டுப்பாடு காரணமாக பல உலக நாடுகள் நெருக்கடியில் சிக்கியுள்ளன. உலகின் மூன்றாவது பெரிய கச்சா எண்ணெய் இறக்குமதி நாடான இந்தியாவிலும் இதன் தாக்கம் அதிகம் காணப்படுகிறது.

போர் முடிவின்றி தொடர்வதால் வரும் நாட்களில் இன்னும் மோசமான நிலை வரக்கூடும் என அஞ்சப்படுகிறது.

இது பொருளாதாரத்திலும் ஸ்திரமின்மையை ஏற்படுத்தி வருகிறது. அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய நாணயத்தின் மதிப்பு வரலாறு காணாத வீழ்ச்சியை சந்தித்து வருகிறது.

இது இந்தியாவின் அந்நிய செலாவணி இருப்புக்கு பெரும் சவாலாக மாறியுள்ளது. இந்நிலையில் அந்நிய செலாவணி வெளியேற்றத்தை குறைத்து, பொருளாதாரத்தை நிலைநிறுத்த மத்திய அரசு பல வழிகளில் முயன்று வருகிறது.

இதனொரு பகுதியாக விலை மதிப்பற்ற உலோகங்கள் மீதான இறக்குமதி வரி கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது.

அதேநேரம் இந்தியாவின் அந்நிய செலாவணி கையிருப்பை தக்க வைக்கும் முயற்சியாக இந்திய ரிசர்வ் வங்கி சுமார் 1.14 லட்சம் கோடி மதிப்பிலான கையிருப்பில் உள்ள தங்கத்தை விற்பனை செய்ததாக தகவல் வெளியாகி இருந்தது.

ஆனால் இந்த தகவலை மத்திய நிதி அமைச்சகம் திட்டவட்டமாக மறுத்துள்ளது.

மாறாக 2025–26 ஆண்டுக்கான ரிசர்வ் வங்கி அறிக்கையில் அந்த நிதியாண்டில் மத்திய வங்கியின் தங்கம் கையிருப்பு அதிகரித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

பொதுமக்கள் ஓராண்டுக்கு தங்கம் வாங்க வேண்டாம் என பிரதமர் மோடி அறிவுறுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# தொழிலாளர் கல்வி நிலையத்திற்கு பிரத்யேக இணையதளம் உருவாக்கம்!




சென்னை, ஜூன். 04–

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் 1973–ம் ஆண்டு தொடங்கப்பட்டு, பின்னர் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, 1988–லிருந்து சங்கமாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசின் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் இக்கல்வி நிலைய ஆட்சிமன்றக் குழுவின் தலைவராவார். இக்கல்வி நிலையத்தின் நிர்வாக செலவுகளை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு ஆண்டு தோறும் மானியம் அளித்து வருகிறது.

இக்கல்வி நிலையம் தொழிலாளர் மேலாண்மையில் பி.ஏ. (இளங்கலை பட்டப்படிப்பு) மற்றும் எம்.ஏ (முதுகலை பட்டப்படிப்பு) ஆகியவற்றை நடத்தி வருகிறது. 2001 முதல் முழுநேர மற்றும் பகுதி நேர ஆராய்ச்சி (பி.எச்.டி) படிப்பு நடத்துவதற்கு சென்னைப் பல்கலைக் கழகம் ஓர் ஆராய்ச்சி நிலையமாக இக்கல்விநிலையத்தை அங்கீகரித்துள்ளது.

மேலும், இக்கல்வி நிலையம் தொழிலாளர் நிர்வாகத்தில் முதுகலை பட்டயப்படிப்பு (பி.ஜி.டி.எல்.ஏ) ஓராண்டு பகுதி நேரம் (மாலை) மற்றும் தொழிலாளர் சட்டங்களும் நிர்வாகவியல் சட்டமும் என்ற ஓராண்டு பகுதி நேரம் (வார இறுதி நாட்கள் – சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை) பட்டய படிப்பும் பணிபுரிவோருக்காக நடத்தி வருகிறது.

இக்கல்வி நிலையம் கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புகள் போன்றவற்றை தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் மேற்பார்வையாளர்கள், நிர்வாகிகள், தொழிற் சங்கத்தினர், தொழிலாளர்துறை, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக ஆய்வாளர்கள் ஆகியோர்களின் தேவை கருதி, காலமுறையில் நடத்தி வருகிறது.

இக்கல்வி நிலையத்தால் நடத்தப்படும் படிப்புகள், பயிற்சி வகுப்புகள், ஆராய்ச்சி செயல்பாடுகள், சேர்க்கை தொடர்பான தகவல்கள், அறிவிப்புகள் மற்றும் பிற கல்வி நிலைய நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை மாணவர்கள் மற்றம் பொதுமக்கள் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் இந்த இணையதளம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இக்கல்வி நிலையத்தின் செயல்பாடுகளை விரிவாக வெளிப்படுத்தும் நோக்கத்துடன் தகவல் பரிமாற்றத்தை எளிதாக்கி இந்த இணையதளம் (https://tils.tn.gov.in/) உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த இணையதளத்தை சென்னை தலைமை செயலகத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஜா.முகமது பர்வேஸ் இன்று தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுதுறை அரசு செயலாளர் கொ. வீர ராகவ ராவ், தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலைய இயக்குநர் / கூடுதல் தொழிலாளர் ஆணையர் கோ.சசிகலா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நெருக்கடியை சமாளிக்க எண்ணெய் நிறுவனங்களுக்கு ரூ.10,000 கோடி நிதி - விமான பயணிகளுக்கு விடிவுகாலம் பிறக்குமா?



புதுடெல்லி, ஜூன். 04–

மத்திய கிழக்கு மோதலால் எண்ணெய் வரத்து குறைந்துள்ள நிலையில் விமான எரிபொருள் விலையும் கடுமையாக உயர்ந்துள்ளது.

இந்திய விமான நிறுவனங்கள் தங்களின் சர்வதேச விமானச் சேவைகளைக் குறைக்கப் போவதாகவும், பயணக் கட்டணங்களை கணிசமாக உயர்த்தப் போவதாகவும் அண்மையில் அறிவித்திருந்தன.

விமானக் கட்டணங்கள் மேலும் உயராமல் தடுக்கவும், விமானத் துறையை நஷ்டத்தில் இருந்து பாதுகாக்கவும்

விமான எரிபொருள் விலையை நிலைப்படுத்துவதற்காக பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களுக்கு ரூ.10,000 கோடி நிதியுதவியாக வழங்க மத்திய அரசு முடிவெடுத்துள்ளது.

மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி, இந்த வட்டியற்ற நிதியுதவியானது எண்ணெய் சந்தைப்படுத்துதல் நிறுவனங்களுக்கு பெரும் பக்கபலமாக அமையும்.

இதன் மூலம் உள்நாட்டு மற்றும் சர்வதேச வழித்தடங்களில் இயக்கப்படும் இந்திய விமான நிறுவனங்களுக்கு, விமான எரிபொருள் விலையை உயர்த்தாமல் ஒரே சீரான விலையில் வழங்க எண்ணெய் நிறுவனங்களால் முடியும். நேற்று அமைச்சரவை கூட்டத்தின் பின் இந்த முடிவை மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அறிவித்தார். அப்போது செய்தியாளர்களிடம் பேசிய அவர், "கடந்த 2025ஆம் ஆண்டு பஹல்காமில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு, பாகிஸ்தான் அரசு தனது வான்வெளியை இந்திய விமானங்கள் பயன்படுத்த தடை விதித்து மூடியது. இதனால் இந்திய விமானங்கள் மாற்றுப் பாதையில் சுற்றிச் செல்ல வேண்டியிருந்ததாலும், தற்போது மேற்கு ஆசியாவில் நிலவி வரும் போர்ச் சூழலினாலும் சர்வதேச அளவில் விமான எரிபொருள் விலை வரலாறு காணாத வகையில் விண்ணைத் தொட்டுள்ளது.

இந்த இக்கட்டான சூழ்நிலையில், மத்திய அரசின் இந்த ரூ.10,000 கோடி நிதியுதவி இந்திய விமான போக்குவரத்துத் துறைக்கு மிகப்பெரிய நிவாரணமாக இருக்கும்" என்று தெரிவித்தார்.

# ஜப்பானை புரட்டிப்போட்ட 'ஜாங்மி' புயல்



டோக்கியோ, ஜூன். 04–

'ஜாங்மி' என்னும் தீவிர வெப்பமண்டல புயல் ஜப்பானை மிகக் கொடூரமாகத் தாக்கி வந்தது. முன்னதாக 'டைபூன்' என வகைப்படுத்தப்பட்டு, பின்னர் புயலாகக் குறைக்கப்பட்டநிலையில் தலைநகரமான டோக்கியோ உள்ளிட்ட ஜப்பானின் மத்திய மற்றும் கிழக்கு பசிபிக் கடற்கரைப் பகுதிகளை தாக்கியது.

**கனமழை**

இதனால் அப்பகுதியில் இடி, மின்னலுடன் கடுமையான மழை பெய்தது. மேலும் பலத்த காற்று வீசி அந்த நாட்டின் முக்கிய நகரங்களை உலுக்கி வருகிறது. உள்ளூர் நேரப்படி நேற்று அதிகாலை 5 மணியளவில் வக்கா யாமா மாகாணத்தில் மணிக்கு 126 கி.மீ. வேகத்தில் கரையைக் கடந்து பின்னர் உள்நாட்டுக்குள் நகர்ந்து வலுவிழுந்தது.

**பேய்மழை**

டோக்கியோ, ஒவாசே, குஷிமோட்டோ உள்ளிட்ட ஆறுகளில் நகரில் பெய்த பேய்மழை காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு ஊருக்குள் வெள்ளம் புகுந்தது. ஒவாசே பகுதியில் அதிகமாக நேற்று ஒரே நாளில் 55 செ.மீ அளவில் கனமழை கொட்டி தீர்த்தது. முன்னதாக ஆற்றங்கரைகளில் வசித்து வந்த 50 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் பத்திரமாக மீட்கப்பட்டு பாதுகாப்பான பகுதிகளில் தங்க வைக்கப்பட்டனர்.

இந்த பேய்மழை மற்றும் பலத்த காற்று காரணமாக மின்சார கோபுரங்கள், மின்கம்பங்கள் ஆற்றில் அடித்து செல்லப்பட்டன. டிரான்ஸ்பார்மர்களுக்குள் மழைநீர் புகுந்ததால் வெடித்து கருகின. இதனால் சுமார் 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகளில் மின்சார வினியோகம் துண்டிக்கப்பட்டு இருளில் மூழ்கின.

**விமான சேவைகள் ரத்து**

புயல் பாதிப்பு காரணமாக வெளிநாடுகள் மற்றும் உள்ளூருக்குள் இயக்க விருந்த விமான சேவைகள் உள்பட 900 விமானங்கள் நேற்று ரத்து செயயப்பட்டன.

மேலும் புல்லட் ரெயில் சேவைகள், சாலை போக்குவரத்து உள்ளிட்ட அனைத்து பொது போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டன.

புயல் ஏற்படுத்திய பாதிப்பால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் முடங்கியது. புயல் மற்றும் கனமழை காரணமாக 2 பேர் உயிரிழந்தனர். 15–க்கும் மேற்பட்டோர் படு காயம் அடைந்தனர். ஆற்றில் அடித்து செல்லப்பட்டு மாயமான 3 பேரை தேடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

# சினிமா துளிகள்..!



## மகளை இயக்குனராக அறிமுகப்படுத்தும் ராகவா லாரன்ஸ்...!



நடிகரும் இயக்குநருமான Raghava Lawrence தனது மகள் ராகவியை இயக்குநராக தமிழ் சினிமாவில் அறிமுகப்படுத்த உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

வெளியான தகவலின்படி, ராகவி வெளிநாட்டில் திரைப்பட இயக்கம் தொடர்பான படிப்பை முடித்துள்ளார். அவர் இதுவரை யாரிடமும் உதவி இயக்குநராக பணியாற்றவில்லை என்றும், தனது முதல் படத்தை இயக்கத் தயாராகி வருகிறார் என்றும் கூறப்படுகிறது.

மேலும், ராகவி இயக்கும் அறிமுகப் படத்தை ராகவா லாரன்ஸே தயாரிக்க உள்ளதாகவும், இதுகுறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகலாம் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது ராகவா லாரன்ஸ் Kanchana 4 படத்தை இயக்கி நடித்துவரும் நிலையில், தனது மகளையும் இயக்குநராக அறிமுகப்படுத்துவது கோலிவுட்டில் கவனம் பெற்றுள்ளது.

இது அதிகாரப்பூர்வ அறிவிப்புக்கு முன் வெளியாகியுள்ள தகவல் என்பதால், படத்தின் நடிகர்கள், கதை மற்றும் தயாரிப்பு விவரங்கள் விரைவில் அறிவிக்கப்படலாம்.

# வேலை வாய்ப்பு

## பேங்க் ஆப் பரோடா 5000 காலியிடங்கள்!




Bank of Baroda நிறுவனம் 2026 ஆம் ஆண்டிற்கான 5000 (பயிற்சியாளர்) பணியிடங்களுக்கு அறிவிப்பை வெளியிட்டுள்ளது. விண்ணப்பிக்க விரும்பும் பட்டதாரிகளுக்கு இது ஒரு நல்ல வாய்ப்பாகும்.

முக்கிய விவரங்கள்
நிறுவனம்: பேங்க் ஆப் பரோடா
பதவி: Apprentice
Notification No: BOB/HRM/APPRENTICE/ADVT/2026/01
காலியிடங்கள்: 5000 (பயிற்சியாளர்)
பயிற்சி காலம்: 12 மாதங்கள்
விண்ணப்ப தொடக்கம்: 19 மே 2026
விண்ணப்ப இறுதி தேதி: 08 ஜூன் 2026
மாத உதவித்தொகை (Stipend): சுமார் ₹15,000
பணியிடம்: இந்தியா முழுவதும்

கல்வித் தகுதி
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஏதேனும் ஒரு துறையில் பட்டப்படிப்பு (Graduation) முடித்திருக்க வேண்டும்.

வயது வரம்பு
குறைந்தபட்ச வயது: 20
அதிகபட்ச வயது: 28
அரசு விதிகளின்படி வயது தளர்வு வழங்கப்படும்.

தேர்வு முறை
ஆன்லைன் தேர்வு
ஆவணச் சரிபார்ப்பு (Document Verification)
உள்ளூர் மொழித் திறன் சோதனை (தேவைப்பட்டால்)
அதிகாரப்பூர்வ அறிவிப்பு & விண்ணப்பம்; https://bankofbaroda.bank.in/

# பீஹார் மருத்துவமனையில் தீப்பற்றியதில் 10 பேர் பலி!



பாட்னா, ஜூன். 04–

பீஹார் மாநிலம் முசாபர்பூர் தனியார் மருத்துவமனை தீவிர சிகிச்சை பிரிவில் ஏற்பட்ட தீ விபத்தில் நோயாளிகள் 10 பேர் உயிரிழந்தனர்.

பீஹாரின் முசாபர்பூர் மாவட்டத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் இன்று (ஜூன் 04) அதிகாலை தீவிர சிகிச்சை பிரிவில் திடீரென தீப்பற்றியது. தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு போலீசார் மற்றும் தீயணைப்பு படையினர் விரைந்தனர். நீண்ட நேரம் போராடி தீயணைப்பு படையினர் தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்த சம்பவத்தில் தீயில் பலத்த காயமுற்று, புகை மூட்டத்தால் மூச்சு திணறல் ஏற்பட்டு நோயாளிகள் 10 பேர் உயிரிழந்தனர். மேலும் 20 பேர் பத்திரமாக மீட்கப்பட்டு உள்ளனர். நோயாளிகள் அருகிலுள்ள மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு உள்ளனர். மின்கசிவே தீ விபத்திற்குக் காரணம் என போலீசார் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது குறித்து தீயணைப்பு படையினர் கூறியதாவது: மருத்துவமனையில் அதிகாலை 3.55 மணிக்கு தீ விபத்து ஏற்பட்டதாக எங்களுக்குத் தகவல் கிடைத்தது. அதன் பிறகு நாங்கள் சம்பவ இடத்திற்குச் சென்றோம். மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டது. மேலும் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருந்தது. தற்போது அனைத்தும் கட்டுப்பாட்டில் உள்ளது, அனைத்து நோயாளிகளும் மீட்கப்பட்டுவிட்டனர். இந்த சம்பவத்தில் 10 பேர் உயிரிழந்தனர். அவர்களது உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.




ராமநாதபுரம் மாவட்டத்தின் புதிய மாவட்ட ஆட்சியராக சிவகுரு பிரபாகரன் ஐ.ஏ.எஸ் பொறுப்பேற்றுக் கொண்டார்.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



# மகிழ்ச்சியாக கற்றுக் கொள்ளுங்கள்; வெற்றி தேடி வரும்; மாணவர்களுக்கு முதல்வர் விஜய் வாழ்த்து!





சென்னை, ஜூன். 04–

கல்வி ஆண்டின் முதல் நாளை தொடங்கும் மாணவச்செல்வங்களுக்கு வாழ்த்துக்கள்; மகிழ்ச்சியாக கற்றுக் கொள்ளுங்கள்;

வெற்றி உங்களைத் தேடி வரும் என முதல்வர் விஜய் தெரிவித்தார். கோடை விடுமுறை முடிந்து தமிழகத்தில் 1 முதல் 12ம் வகுப்பு வரையிலான அனைத்து மாணவர்களுக்கும் இன்று (ஜூன் 04) பள்ளிகள் திறக்கப்பட்டு புதிய கல்வியாண்டு தொடங்கியது. பள்ளிக்கு வந்த மாணவ, மாணவிகளுக்கு பூங்கொத்து கொடுத்து ஆசிரியர்கள் இனிப்பு வழங்கி வரவேற்றனர்.

இந்நிலையில் வாழ்த்து தெரிவித்து முதல்வர் விஜய் வெளியிட்ட அறிக்கை: இந்தக் கல்வி ஆண்டின் முதல் நாளை,

புதிய நம்பிக்கையோடு தொடங்கும் என் அன்பிற்குரிய மாணவச் செல்வங்களுக்கு மனமார்ந்த வாழ்த்துகள். கல்விதான் உங்கள் எதிர்காலத்தை ஒளிமயமாக்கும் சக்தி. உயரிய கனவுகளை வளர்த்துக் கொள்ளுங்கள், அதற்கேற்ப கடினமாக உழையுங்கள். பள்ளிக்குச் செல்லும் ஒவ்வொரு நாளும் உங்கள் வாழ்க்கையில் முன்னேற்றமாக இருக்கட்டும். மகிழ்ச்சியாக கற்றுக்கொள்ளுங்கள், வெற்றி உங்களைத் தேடி வரும். இவ்வாறு முதல்வர் விஜய் கூறியுள்ளார்.

# 85% எத்தனால் கலந்த பெட்ரோல் பயன்பாட்டை அதிகரிக்க மத்திய அரசு மெகா திட்டம்!





புதுடில்லி, ஜூன். 04–

85% எத்தனால் கலந்த பெட்ரோல் மலிவான விலையில் மக்களுக்கு கிடைக்கவும், அதன் பயன்பாட்டை அதிகரிக்கவும் மத்திய அரசு தீவிரமாக ஆராய்ந்து வருவதாக மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி தெரிவித்தார்.

ஹீரோ மோட்டோ நிறுவனம் தனது முதல் 100 சதவீதம் எத்தனாலில் இயங்கும் பைக்கை நேற்று அறிமுகம் செய்தது. டில்லியில் நடந்த அறிமுக விழாவில் பங்கேற்ற மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு துறை அமைச்சர் ஹர்தீப் சிங் புரி பேசியதாவது: 85% எத்தனால் கலந்த பெட்ரோல், சாதாரண எரிபொருள் வகையை விட மிகவும் மலிவானதாக கிடைக்கும்.

**4 கோடி லிட்டர்**

இந்தியாவில் விற்பனையாகும் பெட்ரோல்வாகனங்களில் 1% வாகனங்கள் 85% எத்தனால் கலந்த பெட்ரோல் பயன்பாட்டிற்கு மாறினால், நான்கு கோடி லிட்டருக்கும் அதிகமான எத்தனால் தேவை உருவாகும். எத்தனால் தயாரிப்பு ஆலைகளுக்கு ரூ.266 கோடி கிடைக்கும். இதில் ரூ.160 கோடி நேரடியாக விவசாயிகளுக்குச் சென்றடையும்.

எத்தனால் பயன்பாடு அதிகரித்தால், ரூ.195 கோடி அந்நியச் செலாவணி சேமிக்கப்படும். 0.28 லட்சம் மெட்ரிக் டன்கள் கச்சா எண்ணெய் இறக்குமதி குறையும். 0.86 லட்சம் மெட்ரிக் டன்கள் அளவிற்குக் கார்பன் டை ஆக்சைடு வெளியேற்றம் குறையும்.

100 சதவீதம் எத்தனாலில் இயங்கும் பைக் அறிமுகம் செய்து இருப்பது இந்தியாவின் எரிசக்தி துறை வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயமாகும். உலகில் இருசக்கர வாகனங்களை உற்பத்தி செய்யும் மிகப்பெரிய நாடாக இந்தியா விளங்குகிறது. இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் நிதின் கட்காரி,''எத்தனால் ஒரு சிறந்த எரிபொருள், தரம் குறைந்ததல்ல; 30 சதவீதம் எத்தனால் கலந்த பெட்ரோல் மற்றும் அதற்கு மேற்பட்ட எரிபொருள்கள் மீதான அதிக வரி விதிப்புப் பிரச்னை குறித்து மாநில அரசுகளுடன் விவாதிப்பதாக நிதி அமைச்சர் எனக்கு உறுதியளித்தார், என்றார்.

# அனைத்து மாணவர்களுக்கும் இலவச பஸ் பாஸ்.. கர்நாடக முதல்-மந்திரி டி.கே.சிவக்குமார் அறிவிப்பு!



பெங்களூரு, ஜூன். 04–

கர்நாடக முதல்–மந்திரியாக டி.கே. சிவக்குமார் நேற்று பதவி ஏற்றார். அவர் பதவி ஏற்றதும் பெங்களூருவில் உள்ள விதான சவுதாவுக்கு வந்து தனது அலுவலகத்தில் உள்ள இருக்கையை தொட்டு வணங்கி அமர்ந்தார். அதைத்தொடர்ந்து மந்திரிசபை கூட்டம் அவரது தலைமையில் நடைபெற்றது. இதில் துணை முதல்–மந்திரி பரமேஸ்வர் உள்பட 13 மந்திரிகளும் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து டி.கே.சிவக்குமார் செய்தியாளர்களிடம் கூறியதாவது:–

**இலவச பஸ் பாஸ்**

கர்நாடகத்தில் அரசு பஸ்களில் பள்ளி – கல்லூரி மாணவிகளுக்கு ஏற்கனவே இலவச பஸ் பயணம் அமலில் உள்ளது. அதே போல் தங்களுக்கும் இலவச பஸ் பாஸ் திட்டத்தை அறிமுகம் செய்ய வேண்டும் என்று மாணவர்களும் கோரிக்கை விடுத்து வந்தனர். நான் எங்கு சென்றாலும் இந்த கோரிக்கையை மாணவர்கள் முன்வைத்தனர்.

**மந்திரிசபை கூட்டம்**

இதனை மனதில் வைத்து இன்று (நேற்று) எனது தலைமையில் நடை பெற்ற மந்திரிசபை கூட்டத்தில் இதுகுறித்து விவாதித்து ஒரு முடிவு எடுத்துள்ளோம். கர்நாடகத்தில் 1–ம் வகுப்பு முதல் கல்லூரி வரை அனைத்து மாணவர்களுக்கும் அரசு பஸ்களில் இலவச பஸ் பாஸ் திட்டம் அறிமுகம் செய்ய தீர்மானித்துள்ளோம். இந்த திட்டத்துக்கு பெயரிட உள்ளோம். இதுகுறித்து ஆலோசித்து முடிவு செய்யப்படும்.

இதற்கு மாணவர்கள் விண்ணப்பிக்க வேண்டும். அப்படியே அனுமதித்தால் மாணவர்கள் யார் என்று கண்டுபிடிப்பது கடினம். அதனால் தகுதியான மாணவர்களுக்கு இந்த திட்டத்தின் பயன் கிடைக்கும். இதற்கு எவ்வளவு நிதி செலவானாலும் இதை நாங்கள் அமல்படுத்துவோம்.

**பாரத் ஜோடோ இளைஞர் சங்கம்**

மேலும் பாரத் ஜோடோ இளைஞர் சங்கம் என்ற பெயரில் 10 ஆயிரம் இளைஞர்கள் சுய உதவிக்குழுக்கள் தொடங்க திட்டமிடப்பட்டு உள்ளது. அதுமட்டுமின்றி தனியார் வேலைவாய்ப்பு அலுவலகம் தொடங்கி நடத்தர இளைஞர்கள் பயன்பெறும் வகையில் அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும் திட்டமிடப்பட்டு இருக்கிறது.

இதுதவிர அரசு துறைகளில் இளைஞர்களை பணியமர்த்தும் நடவடிக்கை நடந்து வருகிறது. இதற்கான அறிவிப்புகள் விரைவில் வெளியாகும். ஏற்கனவே அரசு துறைகளில் 56 ஆயிரம் காலிப் பணியிடங்களை நிரப்புவது குறித்த அறிவிப்பை வெளியிட்டு இருக்கிறோம்.

**ரூ.10 லட்சம் நிதி ஒதுக்கப்படும்**

அடுத்த மந்திரிசபை கூட்டத்தில் இந்த காலிப்பணியிடங்கள் எவ்வாறு நிரப்பப்படும் என்பதை அறிவிப்போம். தனியார் வேலைவாய்ப்பு அலுவலகத்துக்கான வழிமுறைகள் இன்னும் ஒரு மாதத்துக்குள் வகுக்கப்பட்டு முறைப்படுத்தப்படும். அதில் வேலைவாய்ப்புக்காக பெயர்களை பதிவு செய்யும் இளைஞர்களுக்கு விரைவில் வேலை கிடைப்பதை அரசு உறுதி செய்யும்.

கிராம பஞ்சாயத்து அளவில் ஒவ்வொரு பாரத் ஜோடோ இளைஞர் சங்கத்துக்கும் தலா ரூ.10 லட்சம் நிதி ஒதுக்கப்படும். இதன்மூலம் தலைமை பண்பு, பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை ஒவ்வொரு இளைஞரும் பெற அரசு நடவடிக்கை எடுக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# உயர்ந்து விட்டது பம்ப் விலை; ஜி.எஸ்.டி.யில் தேவை சலுகை!



கோவை, ஜூன். 04–

இந்திய பம்ப் உற்பத்தியாளர்கள் சங்கம் (இப்மா), தென்னிந்திய பொறியியல் உற்பத்தியாளர்கள் சங்கம் (சீமா), ராஜ்கோட் பொறியியல் சங்கம் (ரியா) கூட்டறிக்கை:

செம்பு, அலுமினியம், ஸ்டெயின்லெஸ் ஸ்டீல், சிலிக்கான் ஸ்டீல், வார்ப்பிரும்பு, கேபிள்கள் உள்ளிட்ட மூலப்பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

எனவே ஜூன் 1ம் தேதி முதல் பம்ப் விலை உயர்ந்துள்ளது. ஒட்டுமொத்த பம்பிங் அமைப்பின் மொத்த செலவில் பம்பின் பங்கு 30 சதவீதமாக இருந்தது. இது 15––20 சதவீதமாக குறைந்துள்ளது. எனவே, இந்த விலை உயர்வு நியாயமானதே. இந்த விலை உயர்வால், பி.ஐ.எஸ்., மற்றும் பி.இ.இ., தரத்துடன் தயாரிக்கப்படும் பம்ப்களுக்கும், அவ்வாறு இன்றி தயாரிக்கப்படும் குறைந்த விலை பம்ப்களுக்கும் இடையே விலை வேறுபாடு மேலும் அதிகரித்துள்ளது.

இதனால் தரமான பம்ப் உற்பத்தியாளர்கள், தரம் குறைந்த தயாரிப்பாளர்களுடன் விலையில் போட்டியிட முடியாமல் பாதிக்கப்படுவர்.

எனவே, ஜி.எஸ்.டி.,யை 18ல் இருந்து 5 சதவீதமாகக் குறைக்க வேண்டும். விவசாயத்துக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும் நிலையில், தரமான பம்ப்களால் சேமிக்கப்படும் மின்சாரம், ஜி.எஸ்.டி.,சலுகையால் ஏற்படும் வருவாய் இழப்பை விட, லாபகரமானதாகவே இருக்கும். எனவே, ஜி.எஸ்.டி.,குறைப்பை உடனே நடைமுறைப்படுத்த வேண்டும். இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொடங்கியது தென்மேற்கு பருவமழை!



சென்னை, ஜூன். 04–

கேரளாவில் தென்மேற்கு பருவமழை அதிகாரப்பூர்வமாகத் துவங்கியுள்ளதைத் தொடர்ந்து, அதன் தாக்கத்தால் தமிழகத்தின் எல்லையோரப் பகுதியான தென்காசி மாவட்டத்தின் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளிலும், குற்றால அருவிகளிலும் தண்ணீர் வரத்து கணிசமாகத் தொடங்கியுள்ளது.

வழக்கமாக மே மாத இறுதியிலேயே தொடங்க வேண்டிய இந்த பருவமழை, இந்த ஆண்டு சில நாட்கள் தாமதமாகத் தொடங்கினாலும், தற்போது குற்றால மெயின் அருவி, ஐந்தருவி மற்றும் பழைய குற்றாலம் உள்ளிட்ட அனைத்து அருவிகளிலும் தண்ணீர் விழத் தொடங்கியிருப்பது சுற்றுலாப் பயணிகளிடையே பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இருப்பினும், மெயின் அருவி பகுதியில் நீண்ட நாட்களாக நடைபெற்று வரும் உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் பராமரிப்புப் பணிகள் இன்னும் முழுமையாக நிறைவடையாத காரணத்தாலும், தற்போதைய மழையினால் அப்பணிகள் மேலும் தடைபட்டுள்ளதாலும், பயணிகளின் பாதுகாப்பு கருதி மெயின் அருவியில் மட்டும் குளிப்பதற்குப் பொதுமக்களுக்குத் தற்காலிகமாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

# ‘ஜனநாயகன்’ கசிவு - மேலும் ஒருவர் கைது!



சென்னை, ஜூன். 04–

விஜய் முதல்வர் ஆகும் முன் கடைசியாக நடித்த படம் ஜனநாயகன்.

சதுரங்கவேட்டை, தீரன் அதிகாரம் ஒன்று, நேர்கொண்ட பார்வை, துணிவு பட இயக்குநர் ஹெச். வினோத் இப்படத்தை இயக்க மமிதா பைஜூ, பிரகாஷ் ராஜ் உள்ளிட்டோர் இதில் நடிக்க அனிருத் இசையமைத்திருந்தார்.

கடந்த பொங்கலுக்கு ரிலீஸ் ஆக வேண்டிய படம் சென்சார் முட்டுக்கட்டையால் முடங்கியது.

இடையில் படம் இணையத்தில் லீக் பலரும் அதிர்ச்சி அடைந்தனர். இருப்பினும் படம் தியேட்டரில் ரிலீஸ் ஆகும் நாளை எதிர்நோக்கி ரசிகர்கள் காத்திருக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக சைபர் கிரைம் காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டனர். படம் எடிட்டிங் குழுவில் இருந்தவரால் கசியவிடப்பட்டது என்று கண்டறியப்பட்டது.

இந்த வழக்கில் 9 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். 9 பேரின் ஜாமீன் மனுக்களை சென்னை உயர் நீதிமன்றம் அண்மையில் தள்ளுபடி செய்தது.

இந்நிலையில் இந்த வழக்கில் ஐடி ஊழியரான மேலும் ஒருவர் சைபர் கிரைம் போலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்மூலம் இதுவரை இந்த வழக்கில் கைது செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை 10 ஆக உயர்ந்துள்ளது.

# டாஸ்மாக் மதுக்கடையில் கூடுதல் விலைக்கு விற்பனை; 277 பேர் சஸ்பெண்ட்!




சென்னை, ஜூன். 04–

டாஸ்மாக் மதுக்கடையில் மே 28ல் நடத்தப்பட்ட சோதனையில் கூடுதல் விலைக்கு மது விற்ற பணியாளர்கள் 277 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர்.

இது குறித்து தமிழக மாநில வாணிபக் கழகம் வெளியிட்ட அறிக்கை: டாஸ்மாக் மதுக்கடையில் மே 28ல் நடத்தப்பட்ட சோதனையில் மதுபான சில்லறை விற்பனை கடைகளில் மதுபானம் அதிகபட்ச சில்லறை விற்பனை விலையை விட கூடுதலாக ரூ.10 முதல் ரூ.50 வரையும், அதற்கு மேல் கூடுதல் விலைக்கு விற்பனை செய்தது கண்டறியப்பட்டு கடைப்பணியாளர்கள் மீது குற்றச்சாட்டின் அடிப்படையில் 277 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர்.

அவர்களை மீண்டும் பணியில் அமர்த்துவதற்கு கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. கூடுதல் விலைக்கு மது விற்பனை செய்த பணியாளர்களின் அபராத தொகை சரக்கு மற்றும் சேவை வரி மற்றும் வட்டித்தொகை வங்கியில் செலுத்தப்பட்டதை உறுதி செய்ய வேண்டும். வேலை செய்யாத நாட்களுக்கு சம்பளம் கேட்க மாட்டேன் என உறுதி அளிக்க வேண்டும்.

அவர்கள் செலுத்திய காப்புத்தொகை அரசிடம் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். பொது கலந்தாய்வு வாயிலாகவே மீண்டும் பணி நியமனம் செய்யப்பட வேண்டும். மீண்டும் தவறு செய்தால் நிரந்தர பணி நீக்கம் செய்ய பரிந்துரை செய்யப்படும் என்று நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# பாஜ பெண் நிர்வாகி குறித்து ஆபாச பேச்சு; திமுக எம்பி மகன் கைது!



சென்னை, ஜூன். 04–

பாஜ நிர்வாகி அலிஷா அப்துல்லா அளித்த புகாரில் திமுக எம்.பி., திருச்சி சிவா மகன் சூர்யா சிவா கைது செய்யப்பட்டார்.

பிரபல பைக் ரேஸரும் பாஜக பிரமுகருமான அலிஷா அப்துல்லா, நேற்று சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் ஒரு புகார் அளித்தார். சமூக வலைதளங்களில் தன்னை பற்றி அவதூறு பரப்பியதாகக் கூறி, யூடியூபர் முக்தார் மற்றும் திருச்சி சூர்யா ஆகியோர் மீது கண்ணீர் மல்க புகார் அளித்தார்.

இந்த புகார் அடிப்படையில் திருச்சி சூர்யா சிவா (ஜூன் 04) கைது செய்யப்பட்டுள்ளார். இவர், திமுக எம்.பி., திருச்சி சிவாவின் மகன். இந்த புகாரில் தொடர்புடைய யூடியூபர் முக்தாரை போலீசார் தேடி வருகின்றனர்.

# அமைச்சருக்கு தெரியாமல் நடக்கிறதா பதவி உயர்வு கவுன்சிலிங்? புலம்பும் டாஸ்மாக் ஊழியர்கள்!




மதுரை, ஜூன். 04–

‘டாஸ்மாக் நிறுவன உதவியாளர் பணியிடங்களை பாரபட்சமின்றி பதவி உயர்வு மூலம் நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். மாறாக அமைச்சருக்கு தெரியாமல் தி.மு.க., ஆட்சியில் தெரிவித்தபடி பணியிடங்களை குறைத்துக் காட்டி நிரப்புவதாக’ ஊழியர்கள் கருதுகின்றனர்.

தமிழகத்தில் டாஸ்மாக் சில்லரை விற்பனையை கடைகளை 2003 முதல் அரசே நடத்தி வருகிறது. இக்கடைகளை நடத்த பட்டப்படிப்பு மற்றும் ரூ.50 ஆயிரம் டெபாசிட்டுடன் மேற்பார்வையாளர்கள், பத்தாம் வகுப்பு மற்றும் ரூ.15 ஆயிரம் டெபாசிட்டுடன் விற்பனையாளர்கள், 8ம் வகுப்பு தேர்ச்சி, ரூ.10 ஆயிரம் டெபாசிட்டுடன் உதவி விற்பனையாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

2016 ல் ஜெயலலிதா முதல்வரான போது கொள்கை அடிப்படையில் 2018ல் 500 கடைகள் மூடப்பட்டன. இதனால் வேலையிழந்த கடை ஊழியர்களை பயன்படுத்திக் கொள்ள, டாஸ்மாக் துறையில் அமைச்சுப் பணியாளராக (கிளார்க்) உதவியாளர் பணியிடத்தில் நியமிக்க தேர்வு நடத்தினர். இதில் கடைகளில் பணியாற்றிய பட்டப்படிப்பு தகுதியுள்ள 8 ஆயிரம் பேர் பங்கேற்றனர். அவர்களில் 500 பேரை டாஸ்மாக்கில் ‘இளநிலை உதவியாளராக’ நியமித்தனர்.

டாஸ்மாக் ஊழியர்கள் கூறியதாவது: டாஸ்மாக் நிறுவனம் துவங்கிய 1983க்குப் பின் 1985: கடந்த தி.மு.க., ஆட்சியில் டாஸ்மாக்கில் அரசாணை 44 ன்படி உதவியாளர் பணியிடங்கள் 1060 காலியாக இருந்தன. ஆனால் அவர்கள் அரசாணை 18 ன்படி 200 ஆக குறைத்துக் காட்டினர். இவற்றை இப்போது பதவி உயர்வு மூலம் நிரப்ப உள்ளனர். இதற்காக இன்று (ஜூன் 4) அனைத்து மண்டல அலுவலகங்களிலும் கவுன்சிலிங் நடக்கிறது.

ஆயிரம் பணியிடங்களுக்கு மேல் காலியாக உள்ளநிலையில் பதவி உயர்வுக்காக காத்திருக்கும் இளநிலை உதவியாளரான எங்கள் 500 பேருக்கும் வழங்கலாம். அவ்வாறு இல்லாமல் கடந்த ஆட்சியில் அறிவித்தபடி குறைந்த எண்ணிக்கையில் 200 பேருக்கு மட்டுமே பதவி உயர்வு வழங்க உள்ளனர். இதனால் ஒரே தகுதியில் உள்ள 300க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்படுகின்றனர்.

புதிதாக பொறுப்பேற்றுள்ள அமைச்சருக்கு தெரியாமல் அதிகாரிகளே நடத்துவதை ரத்து செய்து, பாரபட்சமின்றி பதவி உயர்வு வழங்க வேண்டும் என்கின்றனர்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020